# திண்டுக்கல் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(19-09-2015 – 23-09-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 18-09-2015

**கடந்த கால வானிலை 15-09-2015 முதல் 17-09-2015 வரை**

| **காரணிகள்** | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 39 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 25-26 |
| மேக மூட்டம் | 3-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 38-64 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 16-18 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 23-09-2015 - 8. 30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **19.09.15** | **20.09.15** | **21.09.15** | **22.09.15** | **23.09.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 2 | 4 | 12 | 30 | 10 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 39 | 38 | 37 | 36 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 27 | 26 | 26 | 25 | 25 |
| மேக மூட்டம் | 5 | 5 | 5 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 55 | 62 | 64 | 70 | 68 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 44 | 46 | 50 | 52 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 17 | 17 | 17 | 17 | 17 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

குறுஞ்செய்தி :

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான மற்றும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: பருத்தி, மக்காச்சோளம், வாழை, கரும்பு மற்றும் காய்கறிகள்**

பருவம்: பருத்தி- முளைக்கும் பருவம், மக்காச்சோளம்- விதைத்தல் பருவம், கரும்பு- தூர் கட்டுதல் பருவம்

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மற்றும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொருத்து தண்ணீர் பாய்ச்ச ஏற்ப்பாடு செய்யலாம்.
- வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையைப் பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்யவும்.
- மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்க முறையாக நிலத்தை சட்டிக்கலப்பையை பயன்படுத்தி ஆழமாக உழவு செய்யலாம்.
- கடைசி உழவிற்கு முன்பு தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 12.5 டன் எக்டர் என்ற அளவில் இடவும். ரோட்டோவேட்டர் கருவியை பயன்படுத்தி நிலத்தை நன்கு பண்படுத்தவும்.
- வரும் வானிலை பயன்படுத்தி விவசாயிகள் மக்காச்சோளம் நடவுதற்கு ஏற்றவாறு நிலத்தை தயார் செய்து படுக்கையை ஏற்படுத்தி விதைக்க அறிவுறுத்தப்படுகின்றன.
- வெண்டைக்காய், கத்திரிக்காய் மற்றும் தக்காளி போன்ற செடிகளில் நன்றாக கவனித்து அதில் தத்துப்பூச்சி பாதிப்பு காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த டைமீதோயேட் 30 EC @ 2 ml/liter தெளிக்கவும்.